பக்கங்கள் 15+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## மதுபோதையில் அட்டகாசம்! இரண்டு பொலிஸார் கைது!!

**யாழில் முகம் சுழிக்கும் செயல்**

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் பொலிஸாரின் விடுதிக்குள் மதுபோதையில் அட்டகாசம் புரிந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 14 திங்கட்கிழமை 26.02.2024 அதிர்வு 210









# சபாநாயகர் யாப்பாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## கையொப்பம் திரட்டும் நடவடிக்கை இன்று ஆரம்பம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது. அந்தப் பிரேரணையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றும்போது மேற்படி சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரிந்துரைகளை சபாநாயகர் சரியாக அமுல்படுத்தாமை, அரசமைப்பு, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் மற்றும் நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை மீறுதல் உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது. 04▶

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் அதிகாலை சுட்டுப் படுகொலை!



எல்பிட்டிய, பத்திராஜ வத்தை பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் பதவியை வகித்த றொஷான் குமார (வயது 51) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை.

சம்பவம் தொடர்பில் எல்பிட்டிய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மட்டக்களப்பில் ரயில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பில் ரயில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கோட்டையிலிருந்து நேற்று மாலை 3.05 மணிக்கு மட்டக்களப்பு நோக்கிப் புறப்பட்ட புலதுசி கடுகதி ரயில், இரவு 10.20 மணியளவில் மட்டக்களப்பு, திராய்மடுவ பிரதேசத்தை அண்மித்த பகுதியில் இளைஞர் மீது மோதியுள்ளது.

கருவப்பங்கேணி, சிவநாகதம்பிரான் வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய மேற்படி இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# யாழ். நகர் மத்தியில் வாகனம் தீக்கிரை!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் நகரின் மத்திய பகுதியில் வாகனமொன்று இன்று தீக்கிரையாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடையிலுள்ள வெற்றுக் காணியொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனமே தீக்கிரையாகியுள்ளது.

வாகனத்தில் ஏற்பட்ட மின்கசிவே அனர்த்தத்துக்குக் காரணம் எனத் தெரியவந்துள்ளது.

யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயைக் கட்டுப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# குடாநாட்டில் அண்மையில் இரண்டு உயிரிழப்புக்கள் ஏற்பட்ட பின்னரும் தொடரும் ஆபத்தான பயணங்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் பஸ்ஸின் மிதிபலகையில் இருந்து தவறி வீழ்ந்து இருவர் உயிரிழந்துள்ள நிலையிலும், பயணிகள் பஸ்ஸின் மிதிபலகையில் தொங்கியவாறு ஆபத்தான பயணங்களை இன்னமும் தொடர்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட சிலர் யாழ். நகர் பகுதியில் இருந்து காரைநகர் நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸில், மிதிபலகையில் தொங்கியவாறு பயணிக்கும்போது , வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதுண்டு விழும் காட்சிகளை ஒருவர் கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து, தனது சமூக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளார்.

அந்தக் காணொளி தற்போது வைரலாகி வருகின்றது.

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் கடந்த 19ஆம் திகதி பஸ்ஸை நிறுத்த முதல், பெண்ணொருவர் இறங்க முற்பட்ட வேளை தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். அதேவேளை, கடந்த 23ஆம் திகதி நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக, பஸ்ஸின் மிதிபலகையில் பயணித்த இளைஞர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்த இரு உயிரிழப்புக்கள் அண்மையில் இடம்பெற்ற நிலையிலும், ஆபத்தான மிதிபலகைப் பயணத்துக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# யாழ். நகரில் மோட்டார் சைக்கிளைத் திருடி தீக்கிரையாக்கிய நபரைத் தேடும் பொலிஸ்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்று தீக்கிரையாக்கிய சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நகர் பகுதியில் அமைந்துள்ள நகைக்கடை ஒன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைக் காணவில்லை என உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, கடைத் தொகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் கடையின் முன்பாக அமர்ந்திருக்கும் நபர் ஒருவர் சிறிது நேரத்தில் மோட்டார் சைக்கிளை அங்கிருந்து திருடிச் செல்லும் காட்சிகள் பதிவாகி இருந்தன.

அதன் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், மோட்டார் சைக்கிள் திருடப்பட்ட இடத்தில் இருந்து சற்றுத் தொலைவில் அந்த மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது..

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

# மஹிந்த களமிறக்கும் வேட்பாளரை வெற்றிபெற வைக்க மக்கள் தயார்

## மொட்டுக் கட்சி எம்.பி. ரோஹித கூறுகின்றார்





"மஹிந்த ராஜபக்ஷவை நேசிக்கும் மக்களே இந்நாட்டில் உள்ளனர். அவர் களமிறக்கும் வேட்பாளரை வெற்றி பெற வைப்பதற்கு மக்கள் தயாராக உள்ளனர்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி எமது தரப்புக்குச் சவால் அல்ல. ஏனெனில் அக்கட்சியின் தலைவரிடம் தலைமைத்துவப் பண்பு கிடையாது. இதை நாம் கூறவில்லை. அக்கட்சியின் உறுப்பினர்கள்தான் குறிப்பிட்டு வருகின்றனர் .

நாம் களமிறக்கியுள்ள அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

இம்முறையும் வெற்றி வேட்பாளர் களமிறக்கப்படுவார், மஹிந்த ராஜபக்ஷ பெயரிடும் வேட்பாளரை வெற்றி பெற வைப்பதற்கு நாட்டு மக்கள் தயாராக–வே உள்ளனர்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மதுபோதையில்...**

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கியிருக்கும் விடுதிக்குள் மதுபோதையில் நுழைந்து சக பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டம் – ஒழுங்கை நிலைநாட்டுகின்ற பொலிஸாரே இவ்வாறு செயற்பட்டமை பலரையும் முகம் சுழிக்க வைத்துள்ளது.




**சபாநாயகர்...**

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசஸ, எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், திஸ்ஸ அத்தநாயக்க, சந்திம வீரக்கொடி மற்றும் ஷான் விஜயலால் டி சில்வா ஆகியோர் இதில் இன்று கையெழுத்திட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனும் இதில் கையொப்பமிட்டார்.

சபாநாயகர் அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை இரண்டையும் மீறியதால் அவர் மீதான நம்பிக்கையை இழந்துள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இன்று கையெழுத்திட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நமது நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பில் நிறைவேற்று, சட்டமன்றம் மற்றும் நீதித்துறை ஆகிய 3 முக்கிய தூண்கள் செயற்படுகின்றன. சட்டங்களை ஏற்றுக் கொள்வது சட்டமன்றத்தின் மூலம் செயற்படுத்தப்படுவதோடு, அதன் சட்ட மற்றும் அரசமைப்பு அமுலாக்கம் சபாநாயகர் தலைமையிலான அதிகாரிகளின் பொறுப்பாகும். நிகழ்நிலைக் காப்புச் சட்டம் சட்டவிரோதமான முறையிலேயே சட்டமாக மாறியுள்ளது.

இந்தச் சட்ட வரைவு குறித்து உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் மற்றும் தீர்ப்புகளை முற்றிலுமாக நிராகரித்து, சபாநாயகர் தலைமையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அவர் கையெழுத்திட்டு, உயர் நீதிமன்றத்தின் உயர் சட்டத்தை மீறி சட்டவிரோதமான முறையில் இதை நாட்டின் சட்டமாக்கியுள்ளார். இதன் மூலம் சபாநாயகர் அரசமைப்புச் சட்டத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளையும் மீறியுள்ளது.

சபாநாயகர் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உயர் சட்டத்தைப் பின்பற்றி, சட்டங்களைச் சரியாகவும் முறையாகவும் நிறைவேற்ற வேண்டும். அதை அவர் வேண்டுமென்றே மீறினார். எனவே, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றும் நடவடிக்கையில் சபாநாயகரின் செயற்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன. அவர் மீதான நம்பிக்கை அற்றுப் போயுள்ளது.

நான் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல தடவைகள் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் இந்தத் தவறை சரி செய்யுமாறு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த போதும், அதனை வேண்டுமென்றே நிராகரித்ததன் மூலம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அத்தகைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் இல்லை என்பதனால் நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளோம். அடுத்த கட்சித் தலைவர் கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடப்பட்டு, அதன் பின்னர் இவ்விவகாரத்தை உடனே விவாதத்துக்கு எடுத்து பதவியில் இருந்து அவரை நீக்க நடவடிக்கை எடுப்போம்." – என்றார்.

# தங்காலை - மாத்தறை வீதியில் நடந்த விபத்தில் பெண் மரணம்!

## நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில்



தங்காலை - மாத்தறை பிரதான வீதியின் தலல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் ஓட்டோவும் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் கொட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

விபத்தின் போது ஓட்டோவில் 5 பேர் பயணித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த 33 வயதான ஓட்டோ சாரதி, 15 வயது சிறுவன், 14 வயது சிறுமி மற்றும் 11 மாத குழந்தை ஆகியோர் சிகிச்சைக்காக மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த குழந்தையின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பாசாலை மாணவர்களிடையே பாடங்களைக் குறைக்கத் திட்டம்

தரம் ஆறுக்கு (06) மேலான மாணவர்களுக்கு பாடசாலையில் கற்கக் கூடிய பாடங்களின் எண்ணிக்கையை எதிர்காலத்தில் ஏழு பாடங்களாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வராப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் (24) நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், மாணவர்கள் வாழும் அந்தந்த மாகாணங்களுக்கு ஏற்ப பூர்வீக கைத்தொழிகளை இணைத்து எஞ்சிய மூன்று பாடங்களையும் கற்கும் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு வரும் அனைத்து ஆசிரியர்களும் தகவல் தொழில்நுட்ப அறிவை பெற்றிருக்க வேண்டும் என்றும் சுசில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனடிப்படையில் அனைத்து வலயத்திலும் அமைக்கப்பட்டுள்ள கணினி வள மையங்கள் மூலம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பாரிய வேலைத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஆசிரியர்களுக்குக் கணினிப் பயிற்சி வழங்கும் அதே வேளை, மென்பொருள் உருவாக்கம் மற்றும் பழுது பார்ப்புப் பணிகளுக்காக பிராந்திய மட்டத்தில் குழுவொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சுசில் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உண்மை அம்பலமாகும்

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் சபாநாயகர் தவறிழைத்தமை பெரும் ஜனநாயக விரோத செயல் என்று இப்பத்தியில் பல தடவைகள் விவரமாகவும், விளக்கமாகவும் குறிப்பிட்டு வந்துள்ளோம்.

சபாநாயகர் பதவிக் கதிரையில் இருந்து கொண்டு, இழைக்கக்கூடிய இத்தகைய தவறு தொடர்பில் மாற்றாக - சட்டரீதியாக - நிவாரணம் பெறக்கூடிய வழிவகைகள் சட்டத்திலும் அரசமைப்பிலும் தெளிவாக இல்லை.

ஆகையால், இவ்விடயத்தில் சபாநாயகர் இழைத்தார் எனக் கூறப்படும் தவறு - குற்றம் - தொடர்பில் உரிய நிவாரணத்தை எதிர்க்கட்சிகளால் பெற்றுக்கொள்ள முடியுமா, நியாயம் கிடைக்குமா என்பவை எல்லாம் கேள்விக் குறிதான்.

ஆயினும், பெருந்தவறு - ஜனநாயக மீறல் - குற்றச் செயல் - இவ்விடயத்தில் வேண்டுமென்றே இழைக்கப்பட்டிருக்கின்றது என்பதை எதிர்க்கட்சிகளின் இப்போதைய நடவடிக்கைகள் மூலம் அம்பலப்படுத்தும் வாய்ப்பு கிட்டி இருக்கின்றது என்பது உண்மை.

இந்தச் சட்டம் தொடர்பில் உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த சிபாரிசுகள் - பரிந்துரைகள் - வழிகாட்டல்கள் - போன்றவற்றைப் புறமொதுக்கிவிட்டு அல்லது அவற்றை நிறைவு செய்யாமல் இந்தச் சட்டம் உரிய முறையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டதாகச் சான்றளித்ததன் மூலம் சபாநாயகர் பெரும் தவறிழைத்திருக்கிறார் என்பதுதான் குற்றச்சாட்டு.

அப்படி சபாநாயகர் ஒருவர் நடந்து கொண்டமை பெரும் ஜனநாயகத் தவறு என எதிர்க்கட்சிகள் பல மட்டத்தில், பல தடவைகள் சுட்டிக் காட்டி விட்டன.

அந்தத் தவறை விரைந்து நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கையை சபாநாயகரும் ஆளுந்தரப்பும் மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தரப்புகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை உரிய முறையில் கையாளப்படாத பின்னணியில், இப்போது சபாநாயகர் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணை என்ற நகர்வை எதிர்க்கட்சிகள் ஆரம்பித்திருக்கின்றன.

ஒருபுறம் - சபாநாயகரின் இந்த அத்துமீறிய நடவடிக்கைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தின் கதவை தட்டுவது.

மறுபுறம் - நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து அதனை சபையில் விவரமாக விவாதிப்பது.

- இப்படி இரட்டை முக நகர்வை எதிர்க்கட்சிகள் ஆரம்பித்துள்ளன. இந்த இரட்டை நகர்வில் முழு வெற்றி அவற்றுக்குக் கிடைக்காமல் போகலாம்.

சபாநாயகர் சான்றுரைத்த ஒரு சட்டத்தின் செல்லுபடி தன்மை குறித்து, அவரின் சான்றுரைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது என்று அரசமைப்பு உறுப்புரை கூறுகின்றது.

அதனால் இவ்விடயத்தில் - நிகழ்நிலைக் காப்புச் சட்டத்துக்கு சபாநாயகர் சான்றளித்த விவகாரத்தில் - எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் பெற வாய்ப்பு கிட்டுமா, அதற்கு இடம் இருக்குமா என்பவை கேள்விக்குறியே.

இந்த விவகாரத்தை ஒட்டி ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் உட்பட இரண்டு எதிரணித் தரப்பினரால் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சுமந்திரன் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் உயர் நீதிமன்றம் பரிசீலனை நடத்தி உள்ளது. அடுத்து வரும் நாள்களில் அது தொடர்பான நீதிமன்ற முடிவு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நீதிமன்றத் தீர்ப்பு எவ்வாறும் அமையலாம்.

அதேசமயம் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை கொண்டிராத எதிர்கட்சிகள் இப்போது இவ்விடயத்தை ஒட்டி சபாநாயகருக்கு எதிராகக் கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் அவற்றால் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாமல் போகலாம். அந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்படலாம்.

ஆனால் -

இவ்விடயத்தில் சபாநாயகரும் அரசு தரப்பினரும் பெரும் ஜனநாயக விரோத முறையில் - நாடாளுமன்ற பாரம்பரியங்கள், பொறுப்புகள், கடப்பாடுகள், விழுமியங்கள் போன்றவற்றை மீறி, சின்னத்தனமாக - அற்பத்தனமாக - நடந்து கொண்டார்கள் என்பதை உலகுக்கு பறைசாற்றுவித்து, பதிவாக்கி, அம்பலப்படுத்தும் செயற்பாட்டை எதிர்க்கட்சிகளின் இந்த இரண்டு தடத்திலான நகர்வுகள் நிச்சயம் நிறைவு செய்யும் என்பது உறுதி.

வரலாற்றில் மோசமான ஒரு பதிவை ஏற்படுத்திச் செல்பவராக இந்த சபாநாயகரின் செயற்பாடு அமையும் என்பது திண்ணம்.



# அதிவேகப் பாதைகளில் விபத்துகளை கையாளும் பொறுப்பு ரக்னா லங்காவிடம்

இலங்கையின் அதிவேகப் பாதைகளில் நிகழும் விபத்து தொடர்பான நடவடிக்கைகளை கையாளும் பொறுப்பு ரக்னா லங்கா பாதுகாப்புச் சேவைக்கு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் தனியார் நிறுவனமாகச் செயற்படும் ரக்னா லங்கா நிறுவனம், தற்போதைக்கு அரச நிறுவனங்களின் பாதுகாப்பு சேவைகளைப் பொறுப்பெடுத்துள்ளது.

இந்த நிலையில் அதிவேகப் பாதைகளின் விபத்து நிவாரண சேவைகளும் ரக்னா லங்கா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்று கூறப்படுகிறது.

இதேவேளை விபத்துக்களின் போது மீட்பு நடவடிக்கைகள், காயமடைந்தவர்களுக்கான முதலுதவி உள்ளிட்ட விபத்து தொடர்பான எந்தவொரு பயிற்சியும் இதுவரை காலமும் ரக்னா லங்கா நிறுவன ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இளைஞன் போல் நடித்த யுவதி பொலிஸாரிடம் அகப்பட்டுள்ளார்!

அனுராதபுரம் கலென்பிந்துனவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 19 யுவதி ஒருவர் இளைஞன் போல நடித்து 15 வயது மாணவியுடன் காதல் உறவில் ஈடுபட்டு மாணவியின் தகாத புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மார்ச் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இருவரும் சமூக வலைதளங்கள் மூலம் கிட்டத்தட்ட ஒரு வருடமாக காதல் உறவில் ஈடுபட்டு வந்த நிலையில், கைது செய்யப்பட்டபோதே யுவதி ஒருவர் இளைஞனாக வேடமணிந்து காதலித்தது மாணவிக்கு தெரியவந்துள்ளது.

கலென்பிந்துனுவெவ பிரதேசத்தில் வசிக்கும் 19 வயதுடைய யுவதி சமூக ஊடகங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட மாத்தறை பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய மாணவியுடன் காதல் உறவை வளர்த்துள்ளார்.

19 வயது யுவதி 15 வயது மாணவியிடம் தன்னை ஆண் என அறிமுகம் செய்துள்ளார். தொலைபேசியில் ஆண் ஒருவரின் குரலில் அழைத்து இந்த உறவைப் பேணி வந்துள்ளார். இந்த உறவு சுமார் ஒரு வருடமாகத் தொடர்ந்துள்ளது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மாணவி அந்தரங்க புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை சமூக ஊடகங்கள் மூலம் தனது காதலனாக நடித்த யுவதிக்கு அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில் அந்த மாணவியைத் தனது தந்தையை சந்திக்க வருமாறு அழைத்துள்ளார். ஆனால், மாணவி மறுத்துள்ளார். தன்னை பார்க்க வராவிட்டால், முன்பு அனுப்பிய அந்தரங்க புகைப்படங்களை சமூக வலைதளங்களுக்கு அனுப்புவேன் என மிரட்டியுள்ளார்.

ஆனால், மாணவி தொடர்ந்து தன்னை சந்திக்க மறுத்ததால் மாணவியின் புகைப் படங்களை 19 வயது யுவதி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தேசிய பளுதூக்கும் போட்டியில் வவுனியா மாணவிகள் சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

2024ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகள் காலியில் சாதனை படைத்துள்ளனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகளான பீ.கே.கிசாளினி, ரீ.வன்சிகா ஆகியோரே முதலிடங்களைப் பெற்றுத் தங்கப் பதக்கங்களையும், கே.அபிசாளினி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், எஸ்.அனுசா மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்று மாவட்டத்துக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்தப் போட்டி காலி போத்திவெவ தேசிய பாடசாலையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

# மஞ்சந்தொடுவாயில் நடந்த கிரிக்கெட்டில் சம்பியனானது பூநொச்சிமுனை வி.கழகம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் தாருஸ்ஸலாம், விளையாட்டு கழகம் நடத்திய கிரிக்கெட் தொடரில் பூநொச்சிமுனை விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவானது.

மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் தாருஸ்ஸலாம், விளையாட்டு கழகம் 8 சிறந்த கழங்களை உள்ளடக்கிய விலகல் முறையிலான கிரிக்கெட் தொடரை நடத்தியது.

இதன் இறுதியாட்டத்தில், முதலில் துடுப்பெடுத்தாடிய பூநொச்சிமுனை விளையாட்டுக்கழகம் 8 ஓவர்களில் 2 விக்கட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்படுத்தாடிய அக்ஸன் ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் 8 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதனால் பூநொச்சிமுனை விளையாட்டுக்கழகம் 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.



# உலக வாய்ச் சுகாதார தினத்தில் கல்முனையில் பற்சிகிச்சை முகாம்





(பாறுக் ஷிஹான்)

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய வாய் சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த மாபெரும் பற்சிகிச்சை முகாம் வெள்ளிக்கிழமை (23) பெரிய நீலாவனை கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் கிழக்கு மாகாணக் கிளையின் ஒருங்கிணைப்பில் மகிழ்ச்சியான வாய் ஆரோக்கியமான உடல் எனும் தொனிப் பொருளில் பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.சரூக் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், இலங்கை பல் மருத்துவர் சங்கத்தின் கிழக்கு மாகாண தலைவர் டாக்டர் ரீ.கேதீசன், செயலாளர் டாக்டர் எஸ். லிவிட்டன் உட்பட சங்கத்தின் உறுப்பினர்கள், பல் மருத்துவர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண பல் மருத்துவ சங்கத்தின் வருடாந்த மாநாட்டைத் தொடர்ந்து இடம்பெற்ற பற்சிகிச்சை மருத்துவ முகாமில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் சிகிச்சை பெற்றனர். அதனைத் தொடர்ந்து வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

# ‘நெருக்கடி கலை முகாமைத்துவம்’ வழிகாட்டி கைநூல் கையளிப்பு!



(பாறுக் ஷிஹான்)

‘நெருக்கடி கலை முகாமைத்துவம்’ என்ற வழிகாட்டி கைநூல் கையளிப்பு சாய்ந்தமருது குவாஷி நீதிமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது.

இதன் போது ஓய்வு பெற்ற உதவிக் கூட்டுறவு ஆணையாளரும் சாய்ந்தமருது குவாஷி நீதி மன்றத்தின் நீதிபதியுமான அஹமது லெவ்வை ஆதம் பாவா சாய்ந்தமருது பெரும் குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான ஏ.எல்.எம். ரவூப்பிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது குவாஷி நீதி மன்ற உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# யுத்தகாலத்தில் கடமையாற்றியோரை கௌரவிக்க ஒத்துழைப்புக் கோரல்

## அகில இலங்கை அரச பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர்

(பாறுக் ஷிஹான்)

30 வருட யுத்த காலங்களில் இலங்கை நிர்வாக சேவையில் கடமையாற்றிய அதிகாரிகள், சிரேஷ்ட ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வுக்குச் சகல தரப்பினரும் ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும்.

அகில இலங்கை அரச பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கை நிர்வாக சேவையில் இருந்து அரச அதிபர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தற்போது மீண்டும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரான சேவையில் இணைந்துள்ளார். அவருக்கான பாராட்டு நிகழ்வுகளை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.



கடந்த 30 வருட யுத்த சூழ்நிலையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உயிரை துச்சமென மதித்து கடமையாற்றிய நிர்வாக சேவை அதிகாரிகள், அரச அதிபர்கள், அதே போல் கிழக்கு மாகாண சபையில் பிரதம செயலாளராக இருந்து சுட்டு கொல்லப்பட்ட ஹேரத் அபயவீர மற்றும் சுட்டுக் கொல்லப்பட்ட காத்தான்குடி பிரதேச செயலாளர் மர்ஹூம் ஏ.எல்.எம் பளீல், திருக்கோவில் பிரதேச செயலாளர் தவராஜா, அரச அதிபர் அந்தோனி முத்து, வட மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம் சாள்ஸ், அமைச்சின் செயலாளராகவும் முன்னாள் அரச அதிபராகவும் இருந்த கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு வட கிழக்கில் உள்ள வர்த்தக நிலையங்கள் உதவ முன்வர வேண்டும். அது மாத்திரமன்றிக் கடந்த யுத்த காலங்களில் செயற்பட்ட உயர் அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர்களது விவரங்களை அறிந்தவர்கள் அவர்கள் தொடர்பான தகவல்களை 0761870151 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொண்டு அறியத்தர முடியும்.

எதிர்காலத்தில் ஏனைய துறைகளைச் சார்ந்தவர்களும் எமது தொழிற்சங்கத்தால் கௌரவிக்கப்படவுள்ளனர்.-என்றார்.

# சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்கு சிறந்த ஆன்மீகவாதிக்கான விருது!







தமிழ்நாடு ஏ.பி.ஜே. அறக்கட்டளை, கொழும்பில் நேற்று (25) விருது விழா ஒன்றை நடத்தியது.

இந்தியா - தமிழ்நாடு ஏ.பி.ஜே. அறக்கட்டளை கொழும்பில் உள்ள விருந்தகம் ஒன்றில் நடத்திய இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளுக்குச் சிறந்த ஆன்மீகவாதிக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக உடும்புகளைப் பிடித்த மூவரைக் கைது செய்தனர் பொலிஸார்!

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சட்டவிரோதமாக உடும்புகளை இறைச்சிக்காக பிடித்த மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களை உடும்புகளுடன் நேற்று (25) மாலை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்பு கைவேலி முதலாம் வட்டாரப் பகுதியில் காட்டில் உடும்புகளை வேட்டையாடி வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய காட்டுப் பகுதியில் உடும்புகளை பிடித்து இறைச்சிக்காக விற்பனை செய்ய முற்பட்ட மூவரையே பொலிஸார் இவ்வாறு கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து நான்கு உடும்புகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்களையும் சான்று பொருள்களையும் புதுக்குடியிருப்பு பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.





# ஏறாவூரில் நடைபெற்ற வாசிப்பு மாத நிகழ்வு!

**(எம்.எம்.றம்ஸீன்)**

ஏறாவூர் நகர சபை பொது நூலகங்கள் இணைந்து நடத்தும் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏறாவூர் நகர சபையின் விசேட ஆணையாளர் எம்.எச்.எம்.ஹமீம் தலைமையில் ஏறாவூர் நகரசபை பொது நூலக வளாகத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இரஜாங்க அமைச்சருமான செய்யித் அலிஸாஹிர் மௌலானா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகரசபையின் கணக்காளர் ஆர். எப்.புஷ்ரா, ஏறாவூர் நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி நபீறா றசீன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஹாறூன் உட்பட ஏறாவூர் நகரசபை எல்லைக்கு உட்பட்ட பாடசாலையின் அதிபர்கள், மாணவர்கள் ஏறாவூர் நகர சபை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஏறாவூர் நகர சபை பொது நூலகங்கள் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி, வீட்டுக்கு ஓர் நூலகம் எனும் போட்டிகளில் கலந்து கொண்ட மற்றும் வெற்றி பெற்றவர்கள், நூலகங்களில் கடமை புரிந்து ஓய்வு பெற்றுச் சென்றவர்கள், நூலகங்களில் அர்ப்பணிப்போடு கடமை புரிந்தவர்களுக்குச் சான்றிதழ்களும் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டன.





# வரவு பற்றாக்குறையாக இருக்கும்போது இலவசங்களை கொடுப்பது நியாயமானதா?

## தமிழக அரசுக்கு சரத்குமார் கேள்வி



தமிழக அரசின் வரவு பற்றாக் குறையாக இருக்கும்போது, இலவ சங்கள் கொடுப்பது எந்த விதத்தில் நியாயம் என அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

கும்பகோணத்தில் செய்தியாளர்க ளிடம் பேசியபோதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“திருச்சியில் நடைபெற்ற கட்சியின் உயர்நிலைக் குழு கூட்டத்தில் நிர்வா கிகள் பல்வேறு கருத்துகளை தெரி வித்துள்ளனர். தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஓரிருவாரங்களில் முடிவெடுத்து அறிவிக்கப்படும்.

நடிகர் விஜய் 2026 இல் நடைபெறும் தேர்தலுக்குத்தான் வருவதாக அறி வித்துள்ளார். அப்படி இருக்கும்பட்சத்தில் தற்போதைய அரசியலில் அதன் தாக் கம் எப்படி இருக்கும் எனக் கூற முடியாது.

தமிழகத்துக்கு 8.33 லட்சம் கோடி கடன் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் வரவு குறைவாகவும், செலவு அதிகமாகவும் இருப்பது தான். வரவு பற்றாக்குறையாக இருக்கும்போது, இலவசங்கள் கொடுப்பது எந்த விதத்தில் நியாயம்என தெரியவில்லை. தமிழக மக்கள்கடன் சுமையுடன் வாழ்ந்து வருகிறோம்.

தொழில் வளம் பெருக்க வேண்டும். புதிய தொழிற்சாலைகள் உருவாக வேண்டும். வரவு அதிகரிக்க உற்பத் தியை பெருக்க வேண்டும். இளைஞர்க ளுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண் டும். ஆனால், தொழில் வளத்தைப் பெருக்கி வருமானத்தை உயர்த்தும்திட் டம் எதுவும் பட்ஜெட்டில் இல்லை. நம்முடைய கடனை தீர்ப்பதற்கான எந்த ஒரு முற்போக்கான திட்டத்தையும் அரசு தீட்டவில்லை.”– என்றார்.

# சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார் விஜயதரணி

## ஏற்றுக்கொண்டார் பேரவை தலைவர் அப்பாவு

பா.ஜ.கவில் இணைந்த விளவங்கோடு சட்டப்பேரவை உறுப்பினர் விஜயதரணியின் இராஜினாமா கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக சட்டப்பேரவை தலைவர் அப்பாவு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“விளவங்கோடு சட்டப்பேரவை உறுப்பினர் விஜயதரணி, காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தார் என ஊடகம் மூலம் அறிந்தேன். இந்த நிலையில், தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவரும், சட்டப்பேரவை உறுப்பினருமான செல்வப் பெருந்தகை இணையம் வாயிலாக கடிதம் ஒன்றை எனக்கும், சட்டப்பேரவை முதன்மைச்செயலாளருக்கும் அனுப்பி இருந்தார்.

அதில், ‘விஜயதரணி எம்.எல்.ஏ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி காங்கிரஸ் கட்சிசார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நிலையில், பா.ஜ.கவில் இணைந்துள்ளார். அவர் மீது கட்சி தாவல் தடை சட்டத்தின் படிநடவடிக்கை எடுத்து பதவி நீக்கம்செய்ய வேண்டும்’ என தெரிவித்திருந்தார்.

இதுபோல், பாரதிய ஜனதா கட்சியில், தான் இணைந்து கொண்டேன் எனவும் தனது எம்.எல்.ஏ. பதவியை இராஜினாமா செய்கிறேன் என்றும் சட்டமன்ற விதி 21 படிவம்–எப் மூலம், இராஜினாமா கடிதத்தை தமது கைப்பட எழுதி இணையம் வாயிலாக எனக்கும், முதன்மைச் செயலாளருக்கும் விஜயதரணி அனுப்பி இருந்தார். மேலும், விஜயதரணி என்னை தொலைபேசியில் அழைத்து, தான் முறைப்படி கடிதத்தை தனது கைப்பட எழுதி அனுப்பி இருப்பதாகவும் தெரிவித்தார்.

அந்த கடிதத்தை முறையாக பரிசீலனைசெய்து, அவரது



இராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி வெற்றிடமாக இருப்பது குறித்து தேர்தல் ஆணையத்துக்கு முறைப்படி அறிவிக்கப் படும்.” – என்றார்.

விஜயதரணியின் இராஜினாமா கடிதத்தை பேரவைத்த லைவர் ஏற்ற நிலையில், விரைவில் சட்டப்பேரவை செயலகத் தால் விளவங்கோடு தொகுதி வெற்றிடமாக இருப்பதாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு மூலம், இந்திய தேர்தல் ஆணையத்துக்கு தெரிவிக்கப்படும்.

இதையடுத்து, விளவங்கோடு தொகுதி வெற்றிடமாக இருப்பதாக தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும். ஒரு தொகுதி வெற்றிடமானால் , 6 மாதத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். விரைவில் மக்களவை பொதுத்தேர்தல் நடைபெற உள்ள சூழலில்,மக்களவைத் தேர்தலுடன் விளவங்கோடு தொகுதிக்கும் தேர்தல் அறிவிக் கப்பட வாய்ப்புள்ளது. இந்த தொகுதியை பொறுத்தவரை, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளின் களமாகவே இதுவரை இருந்து வந்துள்ளது.

# எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. உடன் த.மா.கா. கூட்டணி

## ஜி.கே.வாசன் அறிவித்தார்



“பா.ஜ.க. தலைமையில் மக்களவை தேர்தலை தமிழ் மாநில காங்கிரஸ் சந்திக்கிறது. “ என்று அக்கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் அறிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே ஜி.கே.வாசன் மேற் கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நேற்று மாலை பா.ஜ.கவின் தமிழகத்தின் பொறுப்பாளர் அர்விந்த் மேனன், த.மா.கா. அலுவலகத்தில் என்னைச் சந்தித்தார். சுமார் 30 நிமிடங்கள் தமிழக அரசியல் சூழல், மக்களவை தேர்தல் குறித்து பேசினோம். அப்போது, நாளை பல்லடத்தில் பிரதமர் மோடி கலந்துகொள்ளும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தார். நேற்று காலை பா.ஜ.க. மேலிட தலைவர்களும் என்னிடம் தொலைபேசியில் பேசினார்கள். நாளை நடைபெறும் பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் நான் கலந்துகொள்கிறேன்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்து பா.ஜ.க. தலைமையில் மக்களவை தேர்தலை சந்திக்கவுள்ளது. பிரதமர் மோடியை, பிரதமர் வேட்பாளராக கொண்ட பா.ஜ.கவில் அங்கம் வகிப்பதாக த.மா.கா. முடிவெடுத்துள்ளது.

மூப்பனார் காலத்தில் தொடங்கப் பட்டதில் இருந்து பிராந்திய கட்சியான த.மா.கா. தேசிய கண்ணோட்டத்தோடு செயல்படும் கட்சியாகவே தொடர்ந்து செயல்பட்டு கொண்டிருக்கிறது. த.மா.காவின் கருத்துக்களை முறையாக கேட்டு, தமிழகத்தின் நலனுக்காக எந்த இயக்கம் மத்தியில் பாடுபடும் என்ற நம்பிக்கையோடு இந்த முடிவை எடுத்துள்ளோம்.

இன்றைய சூழலில், தமிழ் மொழி, தமிழர்கள், தமிழ்நாடு இதை விரும்பம் மத்திய அரசு உள்ளது. அதற்கு பிரதமரை கோடிட்டு காண்பித்து பல உதாரணங்கள் சொல்ல முடியும். மேலும், இந்தியாவின் பொருளாதாரம், பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த நல்ல முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி அனைத்து தரப்பு மக்களுடைய எண்ணங்களை தொடர்ந்து பிரதிபலித்து கொண்டிருக்கிறது.

நாடாளுமன்ற தேர்தலை பொறுத்தவரை இரண்டு முறை பல மாநில மக்களின் ஆதரவை பெற்று வென்ற கட்சி பா.ஜ.க. தமிழக வாக்காளர்கள் அதனை கூர்ந்து கவனித்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் பட்டி தொட்டி எங்கும் மூன்றாவது முறை பா.ஜ.க. ஆட்சி தொடர்ந்தால் பொருளாதார ரீதியாக நாடு உயரும். ஏழை எளிய மக்களின் கிடைக்கக்கூடிய பலன்கள் அதிகரிக்கும் என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது.

படித்தவர்கள், இளைஞர்கள் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த முறை பா.ஜ.கவின் வெற்றி என்பது உலகளவிலேயே இந்தியாவை 3 ஆவது பொருளாதார நாடாக மாற்ற கூடிய உயர்ந்த நிலையை ஏற்படுத்தும். தமிழக மக்கள் இதனை நன்குஉணரத்தொடங்கியிருக்கிறார்கள். பா.ஜ.க. ஆட்சிக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் கூட்டணி கட்சி என்ற அடிப்படையில் த.மா.கா. மக்களைச் சந்திக்கும்.” – என்றார்.

# எங்களை வழிநடத்துபவராக ஜி.கே.வாசன் இருப்பார்

## அண்ணாமலை தெரிவிப்பு



“பா.ஜ.க. கூட்டணிக்கு ஜி.கே.வாசன் முதல் அடியெடுத்து வைத்துள்ளார். அடுத்த 100 நாள்கள் எங்களை வழி நடத்தக் கூடிய நபராக ஜி.கே.வாசன் இருக்கப் போகிறார். “ என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

பா.ஜ.க. கூட்டணியில் த.மா.கா. இணைந்ததை அடுத்து, அக்கட்சித் தலைவர் ஜி.கே.வாசனை பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை நேரில் சந்தித்தார். கூட்டணியில் இணைந்ததற்கு ஜி.கே.வாசனை சந்தித்து வாழ்த்திய பிறகு, அண்ணாமலை பேட்டி அளித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில்,

“ தமிழகத்தில் பா.ஜ.க. கூட்டணியில் முதல் கட்சியாக தமிழ் மாநில காங்கிரஸ் இணைந்துள்ளது. பா.ஜ.க. கூட்டணிக்கு ஜி.கே.வாசன் முதல் அடியெடுத்து வைத்துள்ளார். அடுத்த 100 நாள்கள் எங்களை வழிநடத்தக் கூடிய நபராக ஜி.கே.வாசன் இருக்கப் போகிறார். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு என தனிப்பெருமை ஒன்று உள்ளது. பிரதமர் மோடியை விட்டு வாசன் எங்கேயும் சென்றதில்லை. தமிழ்நாட்டில் ஆரம்பத்தில் இருந்து மோடிக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர் ஜி.கே.வாசன். பெரிய மாற்றத்துக்கான அடிக்கல் இன்று நாட்டப்பட்டுள்ளது. 2024 மற்றும் 2026 தேர்தல்களில் இதன் தாக்கங்களை பார்க்கலாம்.

எங்கள் கூட்டணியை வலிமையான கூட்டணியாக மாற்ற வேண்டும் என்பது தான் எங்களின் எண்ணம். பிற கூட்டணி கட்சிகளைப் பற்றி எங்களுக்குத் தெரியாது. மூன்றாவது முறையாக மோடி தலைமையான பா.ஜ.க. ஆட்சி அமைய கூட்டணியை வலிமையாக மாற்ற வேண்டும். மோடி அரசின் சாதனைகளைச் சொல்லி தமிழ்நாட்டில் வாக்கு சேகரிப்போம். தி.மு.கவால் அவர்கள் செய்த சாதனையை சொல்லி வாக்கு கேட்க முடியவில்லை. அதனால் எங்களை விமர்சிக்கிறார்கள்.

2024 தேர்தலில் பா.ஜ.க. மீது வைக்கப்படும் பிம்பங்கள் உடைக்கப்படும். கருத்தியல் அடிப்படையில் இங்கே இரண்டு கட்சிகளுக்கு தான் மோதல் உள்ளது.” – என்றார்.





# வொஷிங்டனில் இஸ்ரேலிய தூதரகத்துக்கு முன்பாக தனக்கு தானே தீ வைத்துக்கொண்ட நபரால் பரபரப்பு

அமெரிக்காவின் வோஷிங்டனில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்துக்கு முன்பாக நேற்றைய தினம் ஒருவர் தனக்கு தானே  தீ வைத்துக்கொண்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா யுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அமெரிக்க விமானப்படையை சேர்ந்த ஒருவரே இவ்வாறு தனக்குதானேதீமூட்டிக்கொண்டார்எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை உடனடியாக தீயை அணைத்து அந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருகின்றார் என அமெரிக்க தீயணைப்பு பிரிவினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், வொஷிங்டன் பொலிஸ், இரகசிய சேவை மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளுடன் இணைந்து விசாரணை நடத்தி வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி  நபர், “இராணுவ சீருடையில் காணப்படும் நான் தொடர்ந்தும் இனப்படுகொலையுடன் தொடர்புபட்டிருக்க விரும்பவில்லை“ என தெரிவிக்கும் இணைய காணொளியொன்றும் வெளியாகியுள்ளது.

அத்துடன் தன்மேல் எரிபொருளை ஊற்றி தனக்குதானே தீ மூட்டிக்கொள்வதற்கு முன்னர் அந்த நபர் சுதந்திர பலஸ்தீனம் என கோசமிட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி நபர் தூதரக அதிகாரிகளுக்கு பரீட்சயமான நபர் அல்லவென இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

தூதரகத்துக்கு அருகிலிருந்து கைப்பற்றப்பட்ட மேற்படி நபருடையது என சந்தேகிக்கப்படும் வாகனமொன்று வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினரால் சோதனையிடப்பட்டுள்ளது.

எனினும் அதிலிருந்து ஆபத்தான பொருள்கள் எவையும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் தூதரக ஊழியர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தூதரக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

முன்னதாக, கடந்த டிசம்பர் மாதத்தில் அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்தின் முன்பாகவும் நபரொருவர் இவ்வாறு தனக்கு தானே தீயிட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.







# மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் இன்று

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி வரையில் நடைபெற வுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெ ரெஸ், மனித உரிமைகள் உயர்ஸ் தானிகர் வோல்கர் டர்க் மற்றும் பிற உயர்மட்டப் பிரதிநிதிகள் அமர்வின் தொடக்கத்தில் சுருக்கமான தொடக்க உரைகளை வழங்க உள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பின் ஆறாவது அமர்வு கென்ய தலைநகர் நைரோபியில் இன்று முதல் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள் ளது.

காலநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு, சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் கழிவுப் பிரச்சினை போன்ற நெருக் கடிகளுக்கான தீர்வுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட வுள்ளது.

# நேபாளத்தில் சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்க தீர்மானம்





நேபாளத்தில் நாடு முழுவதும் உள்ள 57 லட்சம் சிறுவர்களுக்கு தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி போடுவ தற்கு அந்த நாட்டு அரசாங்கம் தீர்மா னித்துள்ளது.

அடுத்த மாதம் 20 ஆம் திகதி வரை தேசிய அளவில் தடுப்பூசி முகாம்கள் செயல்படுத்தப்படும் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதில், இந்திய எல்லை மற்றும் காத்மண்டு பள்ளத்தாக்கிற்கு உட்பட்ட 24 மாவட்டங்களில் தடுப்பூசி முகாம்கள் அமைக்கப்படவுள்ளன என குறிப்பிடப் பட்டுள்ளது.

இதன்படி, 9 மாத குழந்தை முதல் 15 வயது வரையான சிறுவர்களுக்கு இவ்வாறு தடுப்பூசி வழங்கப்படவுள் ளது.

நேபாளத்தில் மொத்தமாக 48 ஆயிரத்து 798 தடுப்பூசி மையங்கள் அமைக்கப்பட்டு, 49 ஆயிரத்து 937 பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப படவுள்ளனர் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

கனடா முரசு
பக்கங்கள் - 4
திங்கட்கிழமை 26/02/2024

## கியூபெக் கிழக்கில் நான்கு பேர் கைது!

கியூபெக், பெப். 26

கியூபெக்கின் கிழக்குப் பகுதியில் குற்றவியல் குழுக்களுக்கு இடையிலான வன்முறை மோதலை இலக்கு வைத்து பொலிஸாரால் C2




# யோர்க் பல்கலை தொழிற்சங்கத்தினர் இன்று பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை

**ஒன்ராரியோ,பெப்.26**

**யோர்க் பல்கலைக்கழக தொழிற்சங்கத்தினர் இன்றைய தினம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.**

**இந்தத்தொழிற்சங்கத்தில் கற்பித்தல் உதவியாளர்கள், ஒப்பந்த ஆலோசகர்கள் மற்றும் பட்டதாரி உதவியாளர்கள் போன்ற ஆயிரக்கணக்கானோர் உள்ளடங்கியுள்ளனர்.**

மாநிலத்தின் சம்பளக் கட்டுப்பாட்டு சட்டத்திற்கு எதிராகவே இந்த பணிப் பகிஷ்கரிப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வாரஇறுதியில் பல்கலைக்கழக முகாமைத்துவத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தமக்கு சாதகமாக வரவில்லையெனின் இந்த பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# டொரன்டோ நகரத்தில் போக்குவரத்துக்கு இன்று முதல் ஒரேயொரு கட்டண முறைமை

**ஒன்ராரியோ,பெப்.26**

பெரும் டொரன்டோ நகரப்பகுதிக்குள் பல்வேறு போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தும் பயணிகள் அனைவருக்கும் ஒரேயொரு கட்டண முறை இன்று (பெப்ரவரி 26) முதல் அமுலுக்கு வருகின்றது.

கோ டிரான்சிட், டிடிசி, பிரம்டன் டிரான்சிட், டுரம் ரீஜன் டிரான்சிட், மீவே, மற்றும் யோர்க் ரீஜன் டிரான்சிட் ஆகியவற்றுக்கு இடையில் பயணிக்கும் பயணிகளுக்கு இன்று பெப்ரவரி 26ஆம் திகதி முதல் தனித்தியான கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது என ஒன்ராரியோ அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்த புதிய 'வன் பெயார்' திட்டமானது, பயணிகளுக்கு மேலதிக போக்குவரத்து வழிகளை, சௌகரியத்துடன் வழங்க எதிர்பார்த்திருப்பதாக ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய நிகழ்ச்சி பயணிகளுக்கு வருடாந்தம் 1,600 கனேடிய டொலர்களைச் சேமித்துத் தரும் என மாநிலத்தின் இணைப் போக்குவரத்து அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்திருந்தார்.



# பெண்களின் வெற்றியைப் பின்தள்ள சமூக ஊடகம் பயன்படுத்தப்படுகிறது

## பெண்கள், சமாதானம், பாதுகாப்புக்கான கனேடியத் தூதர் தெரிவிப்பு

**ஒன்ராரியோ,பெப்.26**

இணையப் பாதுகாப்பு என்ற விடயம் கனடாவின் புதிய பால்நிலைத் திட்டத்தில் பிரதான அங்கமாக உள்ளடக்கப்பட்டுள்ளதாக பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கான கனேடியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

உலகமெங்கும் பெண்கள் அடைந்துள்ள வெற்றியை பின்னடையச் செய்வதற்கு சமூக ஊடகம் பயன்படுத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பொது வாழ்க்கையில் அர்த்தமுள்ள பங்கினை கொண்டிருப்பதில் இருந்து பெண்களைத் தடுக்கும் இடையூறுகளில் இருந்து காக்கும் உலகளாவிய முறைமை ஒன்றினை உலக நாடுகள் அறிமுகம் செய்ய வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் முன்வைக்கப்பட்ட பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான மூன்றாவது தேசிய செயல்திட்டத்தினை ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் அங்கீகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




**கியூபெக்...**

**(C1 ஆம் பகத்த் தொடர்ச்சி)**

முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (பெப்ரவரி 25) காலை மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளடங்கலாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிக முக்கியமான குற்றங்களை இழைக்கும் குழுவின் தலைவர் ஒருவருக்கு நெருக்கமான நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸாரினால் வெளியிடப்பட்ட அறிக்கையில், போதைப்பொருள்கள், கைத்துப்பாக்கி ரவைகள், குண்டு துளைக்காத சட்டை என்பன கண்டு பிடிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# லிபரல் - புதிய ஜனநாயகக் கட்சி உடன்பாட்டால் கனடாவின் நிதி நிலையில் பாதிப்பு ஏற்படாதாம்!

## நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃபிரிலாந்து கருத்து

**ஒன்ராரியோ,பெப்.26**

லிபரல் கட்சி மற்றும் புதிய ஜன நாயகக் கட்சி ஆகியவற்றுக்கு இடையிலான பார்மாகெயார் உடன்படிக்கை, கனடாவின் நிதி நிலையில் பாதிப்பை ஏற்படுத்தாது என நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃபிரிலாந்து தெரிவித்துள்ளார்.

ஆளும் லிபரல் கட்சியுடன், பங்காளிக் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சிபார்மாகெயார் தொடர்பில் இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாக கடந்த வாரத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் தெரிவித்திருந்தார்.

இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பும் இந்த உடன்படிக்கை தேசிய பார்மாகெயார் நிகழ்ச்சியின் முதல் அங்கமாகும்.

ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த நிதியமைச்சார், அடுத்த சில நாள்களில் இந்த உடன்படிக்கை கைசாத்திடப்படும் எனக் குறிப்பிட்டார்.

கனடாவிலும், கனேடியர்களுக்காகவும் முதலீடு செய்வது என்பது தமது அரசாங்கத்திற்கு மிகவும் முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரி வீதங்கள் அதிகமாக இருக்கும், பொருளாதார வளர்ச்சியடைந்து காணப்படும் நிலையில், இவ்வாறான நிகழ்ச்சிகள் நாட்டின் மீது பொருளாதார சுமையை அதிகரிக்கும் என லிபரல் அரசாங்கத்தின் மீது தொடர்ந்து விமர்சனங்கள் முன்வைக்கபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# குளிர்காலத்தில் பனிப் பொழிவு குறைவு கோடை காலத்தில் வறட்சி அதிகரிக்கும்

**ஒன்ராரியோ, பெப்.26**

குளிர்காலத்தில் அதிகளவு பனி பொழியாமை, கோடை காலத்தில் வறட்சிக்கு வழிகோலக் கூடும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கனடா சுற்றுச்சூழல் நிறுவனத்தின் தரவுகளுக்கு அமைய டிசம்பர் முதலாம் திகதி முதல் ஒட்டாவாவில் 96.7 சென்ரிமீற்றர் பனி பதிவு செய்துள்ளது.

இதேகாலப்பகுதியில் கடந்த வருடம் 244.5 சென்ரிமீற்றர் பனி பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீர் மட்டங்கள் அதிகரித்து வெள்ளப் பெருக்கு ஏற்படக் கூடிய அபாயம் குறித்து தாம் எப்போதும் அவதானமாக இருப்பதாக சுற்றுச்சூழல் கனடா தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தில் பனி பொழிவதற்கான சாத்தியங்கள் இல்லை எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

குறைந்தளவு பனிப்பொழிவின் காரணமாக, மண்ணிற்கு தேவையான நைட்ரஜன் கிடைக்காமையால் மண்ணின் தன்மைப் பாதிக்கும் எனவும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.



# கனடாவின் பாதுகாப்புச் செலவீனத்தை பாராட்டுகின்றார் அமெரிக்கத் தூதுவர்!

**ஒன்ராரியோ, பெப்.26**

கனடாவின் பாதுகாப்புச் செலவீனத்தை உன்னிப்பாக அவதானித்து வருவதாக கனடாவுக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

புதிய இராணுவத் தளபாடங்களின் கொள்வனவு, உக்ரைனுக்கான உதவி, ஆர்க்டிக் நொராட் என கனடாவின் இராணுவச் செலவினங்களை அமெரிக்கத் தூதுவர் பாராட்டியுள்ளார்.

நேட்டோவுக்கான தமது உறுதி மொழிகளை கனடா நேர்மையுடன் பின்பற்றி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டில் தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.38 சதவீதத்தினை பாதுகாப்பிற்காக கனடா செலவு செய்துள்ளது.

2023ஆம் ஆண்டு நடைபெற்ற நேட்டோ தலைவர்கள் மாநாட்டின் போது உறுப்பு நாடுகள் கையெழுத்திட்ட உடன்படிக்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதத்தைப் பாதுகாப்புக்கு செலவு செய்வதற்கு கனடா இணக்கம் கண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# மோசடிக் குற்றச்சாட்டின் அடிப்படையில் டொரன்டோ நகர ஊழியர்களுக்கு கல்தா!

**ஒன்ராரியோ, பெப்.26**

மோசடிக் குற்றச்சாட்டின் அடிப்படையில் டொரன்டோ நகர ஊழியர்கள் பதவி விலக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் கணக்காய்வாளர் நாயக அலுவலகத்திற்கு 1,450 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இந்த சுயாதீன முறைப்பாட்டு திட்டம் 2022ஆம் ஆண்டு அறிமுகப்பட்டது முதல், அதிகளவு முறைப்பாடுகள் பதிவாகியுள்ள வருடமாக 2023 காணப்படுகின்றது.

டொரன்டோ நகரின் வரி செலுத்தும் மக்களுக்கு முறைகேடு நிகழ்வதற்குத் தாம் அனுமதிக்க முடியாது என கணக்காய்வாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் டொரன்டோ நகர சபையின் ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் நகர எல்லைக்குள் செயற்படும் சிறு வர்த்தகங்கள் மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது மக்களில் ஒருவர் போலி அடையாள ஆவணங்களை சமர்ப்பித்து சுமார் 61,000 கனேடிய டொலர்களைப் பெற்றமை கண்டறியப்பட்டுள்ளது.

மற்றொரு சந்தர்ப்பத்தில் நகர சபை ஊழியர் ஒருவர் போலி நலன்சார் வேண்டுகோள்களை முன்வைத்துள்ளார், எனினும், இந்த 33 சந்தர்ப்பங்களிலும் எதுவித சேவையும் வழங்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டு, குறித்த ஊழியர் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.